# RCPDS

## குழந்தை உரிமை பாதகாப்ப திட்டம்
## விருதுநகர் , நாகை மாவட்டம்

# குழந்தைகளுக்கான
# பேரிடர் பாதுகாப்பு
## ஓவியப் பயிற்சி புத்தகம்



Resource Centre for Participatory Development Studies

RCPDS

kinder not hilfe

# பாதுகாப்பு

## உங்களிடம் இருந்துதான் துவங்குகிறது

### இது என்னுடைய பாதுகாப்பு செயல்பாட்டு புத்தகம்



பெயர் ______________________

வகுப்பு ______________________

பள்ளி ______________________

முகவரி ______________________

பிறந்த தேதி ______________________

# அணிந்துரை

கடந்த இருபது ஆண்டுகளில் இந்தியா பல்வேறு பேரிடர் தாக்குதல்களுக்கு உள்ளாகி இருக்கிறது, குறிப்பாக நிலநடுக்கம், சுனாமி, கடும் வறட்சி, பெரும் வெள்ளம் மற்றும் வைரஸ் விஷகாய்ச்சல்களை சந்தித்துள்ளது. இது தவிர வழக்கமாக நிகழும் வெள்ளம், வறட்சி, நிலச்சரிவு, தொழிற்சாலை விபத்துக்கள், தீ விபத்துகள் போன்ற நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளது. இந்த பேரிடர் களால் ஆண்டொன்றுக்கு லட்சக்கணக்கான மக்கள் மிகவும் மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களே ஆவர். குறிப்பாக குழந்தைகளே அதிக ஆபத்தை சந்திக்கக் கூடியவர்களாக உள்ளனர். இதுபோன்ற பேரிடர் அவசரகாலங்களில் அரசு மற்றும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து KNH நிறுவனம் பல்வேறு நிவாரணப் பணிகளை செய்து வருகிறது. குறிப்பாக KNH நிறுவனம் பணிப்புரியும் பகுதிகளில் இது போன்ற அவசரகாலங்களில் மனிதாபிமான அடிப்படையிலான நிவாரண மற்றும் புனரமைப்பு பணிகளுக்கு முன்னுரிமைக் கொடுத்து பல்வேறு உதவிகள் மற்றும் நலத் திட்டங்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்துவருகிறது. குழந்தைகளுக்கு என்று சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

பேரிடர் அவசர காலங்களில் மக்கள் தங்களை தாங்களே காத்துக் கொள்ளும் திறனை வளர்க்க வேண்டிய தொடர் பயிற்சி அவசியமாகிறது. அதன் ஒரு அங்கமாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த பயிற்சிக் கையேடு குழந்தைகளிடையே ஆபத்தைப் பற்றி விழிப்புணர்வை உருவாக்கவும், கடைபிடிக்கவும், தங்களை பாதுகாத்து கொள்ளவும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. KNH உடன் இணைந்து பணிபுரியும் நிறுவனமான "ஆர்.சி.பி.டிஸ்" நிறுவனம் தேசிய பேரிடர் மேலாண்மை மையம் வெளியிட்டுள்ள குழந்தைகளுக்கான பேரிடர் பாதுகாப்பு ஓவிய பயிற்சி கையேட்டை தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளது. இந்த கையேடு கிராமப்புற குழந்தைகளுக்கும், அவர்கள் சார்ந்த சமுதயத்தினருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது உறுதி. இந்த ஓவிய பயிற்சி கையேட்டின் உருவாக்கத்தில் உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

*Sathish Reginald Samuel*
Country Coordinator for India.
kindernothilfe

# நிறுவனரிடமிருந்து ...

அன்பான குழந்தைகளே,

வணக்கம்! பேரிடர் காலங்களில் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை தெளிவுடன் தெரிந்துக் கொள்ளவே "குழந்தைகள் பாதுகாப்பு செயல்பாட்டுப் புத்தகம்" வெளியிடப்பட்டுள்ளது. பேரிடர்களில் முக்கியமாக தீ, வெள்ளம், நிலநடுக்கம் ஆகியவற்றின் தன்மை, அவை ஏற்படும் போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய கூடாது? என்பதை இந்த புத்தகம் விளக்குகிறது. நீங்கள் இப்புத்தகத்தில் வண்ணம் தீட்டும் போதே அதை நன்கு புரிந்து கொள்வீர்கள். தினமும் ஒவ்வொரு பக்கமாக வண்ணம் தீட்டுங்கள். அப்போது தான் அதில் குறிபிட்டவைகளை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

நீங்கள் மட்டும் பேரிடர்களைப் பற்றி தெரிந்து கொண்டால் போதாது உங்கள் நண்பர்கள், வீட்டில் உள்ளோர், பள்ளி குழந்தைகள் அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள். தெரிந்துக் கொண்ட நீங்கள் தெரிவிக்க வேண்டியது கடமைதானே. பேரிடர்களினால் குழந்தைகள் பலியாவதை தடுக்க தீவிரமாக செயல்படுங்கள்.

வாழ்த்துகளுடன்
முனைவர். ஜான் தேவவரம்
நிறுவனர் - ஸ்பீச் / ஆர்.சி.பி.டி.எஸ்

# சூடான பொருட்கள்
# சூடு இல்லாத பொருட்கள்



டீ – கேத்தல்



சூப்



சோடா



இஸ்திரி பெட்டி



ஐஸ்கீரிம்



சுடு தண்ணீர்

**சூடாக இருக்கக் கூடிய பொருட்களை**
**சிவப்பு நிறத்தில் வட்டமிட்டு காட்டு**

**சூடாக இல்லாத பொருட்களை**
**நீல நிறத்தில் வட்டமிட்டு காட்டு**

# தீ பிடித்தால் நான் என்ன செய்ய வேண்டும்?



# தீ பரவுவதை தடுக்கும் முறைகள்




உன் சட்டையில் தீ பிடித்தால் ஓடாதே
மேலே சொன்னவற்றை செய்...

# தீ பரவுவதை தடுக்கும் முறைகள்

**ஓடாமல் நில்**

ஓடும் போது தீயின் வேகம் அதிகமாகும்



**கீழே படு**





**தீ காயத்தில்**
**குளிர்ந்த நீரை ஊற்று**

**தரையில் உருளு**







**முகத்தை மூடிக் கொண்டு முன்னும்**
**பின்னும் தரையில் உருண்டால்**
**தீ அணைந்து விடும்**

**அவசர உதவிக்கு எண்ணுக்கு**
**தொடர்பு கொள்**

# தீ அல்லது புகையை அருகில் கண்டால்

# "ஊர்ந்து செல்"




**புகை**

உன் கண்களை காயப்படுத்தும்
உன் நுரையீரலை புண்ணாக்கிவிடலாம்
நல்லதல்ல

## குனிந்து தவழ்ந்து புகையை விட்டு வெளியேறி செல்

## உன் குடும்ப நபர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய விதி



## புகையின் கீழ் ஊர்ந்து செல்லவும் கீழே தவழ்ந்து கடக்கவும்

# தீ ஒரு
# விளையாட்டு பொம்மை அல்ல!

**பொம்மைகளை வட்டமிட்டு காட்டு**



அடுப்பில் இருக்கும்
சூடான பாத்திரம்



தீ பொருத்தி



கிரிக்கெட் பந்து



தண்ணீர் பீச்சும்
சுப்பாக்கி



பட்டாசுகள்

# தீயை அணைப்பவர்கள்
# நமது நண்பர்கள்



# வெள்ள தடுப்பு முறைகள்

வெள்ள நீரை பார்த்தால் அந்த இடத்தை விட்டு

ஒதுங்கி மேடான பகுதிக்கு செல்

நீந்த

விளையாட முயற்சிக்காதே





# நிலநடுக்கம் ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?



# நிலநடுக்கம் ஏற்படுகிற போது
# நீ இருக்கும் இடத்தை பொறுத்தது



# மேஜையில் அமர்ந்திருக்கும் போது நிலநடுக்கம் ஏற்பட்டால்





**மேஜைக்கு கீழே குனிந்து, தலையை மூடி, மேஜையை இறுக பிடித்துக் கொள்ள வேண்டும்**



**வெளியிடத்தில் இருந்தால்**
**தரையில் படுத்து**
**தலையை மூடிக்கொள்**

## அறைக்குள் இருந்தால் சுவருக்கு எதிர்புறமாக பந்து போல் சுருண்டு அமர்ந்து கொள்ள வேண்டும்



# படுத்திருக்கும் போது நிலநடுக்கம் ஏற்பட்டால்




## நேராக படுத்து தலையை தலையணையால் மூடிக் கொள்ள வேண்டும்



**சைக்கிள் ஓட்டிக் கொண்டிருக்கும் போது**
**நிலநடுக்கம் ஏற்பட்டால்**
**எங்கே இருக்கின்றாயோ அங்கேயே**
**நேராக அப்படியே இருக்க வேண்டும்**

## நிலநடுக்கம் ஏற்படும் போது மேலிருந்து கீழே விழும் பொருட்களே உனக்கு மிகப் பெரிய அபாயத்தை ஏற்படுத்தும்



# வீட்டின் பாதுகாப்பான இடத்தை தேர்ந்தெடுக்கவும்



## நிலநடுக்கம் ஏற்பட்டால் முயலைப் போன்று வேகமாக ஓடி வெளியேற பயிற்சி எடுக்க வேண்டும்

# நிலநடுக்கம் ஏற்பட்டால் சற்றும் தாமதிக்காதே

# பொருட்கள் கீழே விழுந்து உடைவதற்கு

# முன்பாக பாதுகாப்பான இடத்திற்கு செல்






**நிலநடுக்கம் ஏற்படும் போது**

**பயன்படக்கூடிய முதலுதவி**

**பொருட்களை தயார் நிலையில் வைக்கவும்**

# வீட்டிலிருந்து தப்பித்து செல்லும் வழியை திட்டமிட வேண்டும்




## வீட்டில் உள்ள ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் குறைந்தது வீட்டிலிருந்து வெளியேறும் இரு வழிகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும்

# இப்பொழுது நிலநடுக்கம், தீ விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டுமென்று தெரிந்து கொண்டாயா?

## இதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்



முக்கியமாக நீங்கள் அவசரத்திற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி எண்கள்

தீயணைப்புத் துறை – 101

காவல் துறை – 100

தீ, காவல் மற்றும் அவசரகால ஆம்புலன்ஸ் – 108

# குழந்தைகளுக்கான
# பேரிடர் பாதுகாப்பு
## ஓவியப் பயிற்சி புத்தகம்



Source: National Disaster Management


**ஆலோசனை**

முனைவர். ஜான் தேவவரம்
நிறுவனர், SPEECH / RCPDS

**ஆசிரியர் குழு**

திருமிகு. எர்ஸ்கின் அருணோதயம்
திட்ட இயக்குநர், SPEECH

திருமிகு. நியூட்டன் பொன்னமுதன்
திட்ட மேலாளர், SPEECH

திருமிகு. பொற்கொடி
நிர்வாகி,SPEECH, Madurai

திருமிகு. நிர்மல் ராஜா
திட்ட மேலாளர், RCPDS

திருமிகு. முருகன்
திட்ட மேலாளர், RCPDS

திருமிகு. பழனிக் குமார்
ஆவண அலுவலர், SPEECH



வெளியீடு

**Resource Centre for Participatory Development Studies**
Plot No, 7, Park Town Sixth Street, Post and Telegraph Colony
Madurai 625 017, Tamilnadu, India
rcpdsmdu@gmail.com, www.rcpds.org

**Designed by:**
Documentation Division **SPEECH**